# இன்றைய இறைவார்த்தை

# 11-03-2015

**தவக்காலம் 3ஆம் வாரம் – புதன்**

**முதல் வாசகம்:**

நீங்கள் என் கட்டளைகளை ஏற்று, பின்பற்றி நடங்கள்.

**இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம். 4 : 1, 5 – 9**

மோசே மக்களைப் பார்த்துக் கூறியது: "இப்பொழுது இஸ்ரயேலரே! கேளுங்கள். நான் உங்களுக்குக் கற்றுத்தரும் நியமங்கள், முறைமைகளின்படி ஒழுகுங்கள். அதனால் நீங்கள் வாழ்ந்து, உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் சென்று அதை உரிமையாக்குவீர்கள். நம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும் முறைமைகளையும் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். எனவே, நீங்கள் போய் உரிமையாக்கிக்கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள். அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற்றலுமாய் விளங்கும். இந்த நியமங்களைக் கேள்வியுறும் அனைவரும், உண்மையில் இப்பேரினம் ஞானமும் அறிவாற்றலும் கொண்ட மக்களால் ஆனது என்பர். நாம் குரல் எழுப்பும்போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப் போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக் கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? நான் இன்று நேர்மைமிகு சட்டங்களை உங்களுக்குத் தந்துள்ளேன். இவற்றைப் போன்ற நியமங்களையும் முறைமைகளையும் கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? கவனமாய் இருங்கள் உங்கள் கண்களால் நீங்கள் கண்ட அனைத்தையும் மறந்துபோகாதபடி உங்கள் இதயங்களில் காத்துக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்நாள் முழுமையும் நீங்கள் அவற்றை மறக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் அவற்றை எடுத்துக் கூறுங்கள்."

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 147 : 12 – 13, 15 – 16, 19 (பல்லவி: 12a)**

**பல்லவி: எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவாயாக.**

1. எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவாயாக! சீயோனே! உன் கடவுளைப் புகழ்வாயாக! அவர் உன் வாயில்களின் தாழ்களை வலுப்படுத்துகின்றார். உன்னிடமுள்ள உன் பிள்ளைக்கு ஆசி வழங்குகின்றார். பல்லவி

2. அவர் தமது கட்டளையை உலகினுள் அனுப்புகின்றார். அவரது வாக்கு மிகவும் விரைவாய்ச் செல்கின்றது. அவர் வெண்கம்பளிபோல் பனியைப் பொழியச் செய்கின்றார். சாம்பலைப்போல் உறைபனியைத் தூவுகின்றார். பல்லவி

3. யாக்கோபுக்குத் தமது வாக்கையும், இஸ்ரயேலுக்குத் தம் நியமங்களையும், நீதி நெறிகளையும் அறிவிக்கின்றார். பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்:** யோவான் **6 : 63b, 68b**

ஆண்டவரே! நீர் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.
நிலைவாழ்வும் அளிக்கின்றன.

**நற்செய்தி வாசகம்:**

கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 5 : 17 – 19**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: “திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவை அனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்.”

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனைக்கு:**

கற்றுக் கொடுப்பதைச் சரியாக செய்பவரே பெரியவர் என அழைக்கப்படுவார். கற்றுக் கொடுப்பவர் தாம் கற்றுக் கொடுப்பவற்றை தாம் முதலிலே வாழ்ந்து பார்த்து, பின்னர் கற்றுக் கொடுக்க முற்படும் போதே, அது கேட்போருக்கு நிறைந்த பலனை விளைவிக்கும் என்பது உண்மையாகின்றது.

தன்னிடம் இனிப்பு அதிகமாக சாப்பிடும் மாணவனை அழைத்து வந்து அவனுக்கு அறிவுரை சொல்லக் கேட்ட தாயிடம், ஒருவார கால அனுமதி வேண்டும் என கேட்டு, தன்னிடம் மாற்றத்தை

வரவழைத்துக் கொண்டு பின்னர் போதனையை செய்தார் என மகாத்மா வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. அவர் இன்றும் பெரியவராக கருதப்படுகின்றார். வாழ்ந்து பார்த்து போதிப்பவர்களே உயர்ந்தவர்கள். வார்த்தை ஜாலத்தில், வறட்டு கௌரவத்தோடு போதனை மற்றவர்களுக்குத் தான். எனக்கில்லை என்பவர்கள் ஒரு விதத்தில் விபச்சாரர்களே. இவர்கள் தொழிலாய் போதனையை செய்ய முற்படும் போது சிறியவர்களே.

**********